# அரசுப் பள்ளிகளில் 1–10ஆம் வகுப்பு வரை கணினி அறிவியல் பாடத்தை சேர்க்க வேண்டும்

## எம்எல்ஏவிடம் பி.எட். பட்டதாரிகள் மனு



கடையநல்லூர் எம்எல்ஏ செ. கிருஷ்ணமுரளியிடம் மனு அளிக்கும் பி.எட். பட்டதாரி ஆசிரியர்கள்.

**கடையநல்லூர், ஜூன் 18:** தமிழக அரசுப் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கணினி அறிவியலை ஒரு பாடமாக கொண்டு வருவதற்கு சட்டப்பேரவையில் குரல் எழுப்ப வேண்டும் என வலியுறுத்தி, தமிழ்நாடு பி.எட். கணினி அறிவியல் வேலையில்லா பட்டதாரி சங்கத்தினர் கடையநல்லூர் எம்எல்ஏ செ. கிருஷ்ணமுரளியிடம் மனு அளித்தனர்.

அதன் விவரம்: அதிமுக ஆட்சியில் 2021 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கணினி அறிவியல் பாடம் கொண்டு வரப்படும் என்று நிதி அமைச்சர் அறிவித்தார்.

ஆட்சி மாற்றத்திற்கு பிறகு கணினி அறிவியல் பாடம் பற்றிய அறிவிப்பும் முன்னெடுப்புகளும் இதுவரை நடைபெறவில்லை.

கேரள மாநில கல்வித்துறை கணினி அறிவியல் பாடத்தை, 1 முதல் 10ஆம் வகுப்பு வரை தனிப்பாடமாகவும், 6ஆவது பாடமாகவும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறைப்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டிலும் கணினி அறிவியல் பாடத்தை 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை தனிப்பாடமாகவும், 6ஆவது பாடமாகவும் கொண்டு வந்து மாணவர்கள் சிறப்பான கல்வி வளர்ச்சியை பெறுவதற்கு நடப்பு சட்டபேரவை கூட்டத் தொடரில் குரல் கொடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பேரவையில் வெட்டு தீர்மானம், கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வருவதாக எம்எல்ஏ உறுதியளித்துள்ளதாக சங்க உறுப்பினர்கள் மதினா, உமா ஆகியோர் தெரிவித்தனர்.